**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous — CC.No.38 of 2019
Priliminary Register
Sessions

Depostitions of Prosecution witness for — Prosecutuion PW2, Defence, Court

| | | |
|---|---|---|
| Name | : | ஆரோக்கியமேரி |
| Father name | : | சின்னப்பன் |
| Village | : | வடக்குபாளையம் |
| Taluk | : | |
| Calling | : | PW 2 (LW 4 ) |
| Religion | : | |
| Age | : | 55 |

**1** வது எதிரி ஆஜர் இல்லை**. 2** வது எதிரி காவலில் ஆஜர்**.** அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் **.** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**. 1** வது எதிரி தரப்பில் **355** பா**.**நா**.**சு**.**சா மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 19th day of February 2026

**முதல் விசாரணை**

நான் வடக்குபாளையம் பாளையங்கோட்டையில் மேலத்தெருவில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மருமகன். அவரது வீடு எனது தெருவில் 4 வீடுகள் தள்ளி உள்ளது. 23.02.2018 ஆம் தேதியன்று அ.சா.1 மற்றும் நாங்கள் அனைவரும் குடும்பமாக கோயிலுக்கு சென்றிருந்தோம். கோயிலிலிருந்து வந்தபோது அ.சா.1 வீட்டின் கதவு உடைக்கப்பட்டு அவரது வீட்டிலிருந்து டி.வி., டி.வி.டி செல்போன், லாப்டாப் மற்றும் அயன்பாக்ஸ் ஆகியவை காணவில்லை. தேடிப்பார்த்தோம் பின்னிட்டு 13 ம் தேதியன்று சோழத்தரம் காவல்நிலையத்தில் அ.சா.1 புகார் அளித்தார். அ.சா.1 கொடுத்த புகாரில் போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வடக்குபாளையம் பாளையங்கோட்டையில் எத்தனை ஆண்டுகளாக வசிக்கிறேன் என்றால் சுமார் 40 ஆண்டுகளாக வசிக்கிறேன். சம்பவத்தன்று நாங்கள் எல்லோரும் கோயிலுக்கு சென்றிருந்தோம் என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டு அங்கு சென்றேனா என்றால் நாங்கள் சென்றபோது கூட்டமாக இருந்தது. எனது மருமகன் மற்றும் மகள் படித்துள்ளனர். அ.சா.1 க்கு புகார் அளிக்க முடியாத சூழ்நிலையில் நான் ஏன் சென்று புகார் அளிக்கவில்லை என்றால் அவர் தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதால் புகார் அளிக்கவில்லை. புகார் அளித்த நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல்துறையில் புகார் அளித்த பின்பு பொருட்கள் கிடைத்துவிட்டதாகவும், திருடிய நபரை கண்டுபிடித்துவிட்டதாகவும் தெரிவித்தனர் திருடிய நபரை சென்று பார்த்தேனா என்றால் இல்லை. திருடியநபரை நான் இதுவரை பார்த்ததில்லை என்றால் சரிதான். காவல்துறையினர் சொல்லியதன் அடிப்படையில் தான் எதிரி தான் இந்த வழக்கில் ஈடுபட்டுள்ளார் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை

Sinature of witness

# Form.No.53
# (See Rule 42)
# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII, Cr.P.C)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

Calender
Miscellaneous — CC.No.38 of 2019
Priliminary Register
Sessions

Depostitions of Prosecution witness for — Prosecutuion PW1 / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | ராபர்ட் வின்செண்ட் |
| Father name | : | வின்செண்ட் |
| Village | : | வடக்குபாளையம் |
| Taluk | : | |
| Calling | : | PW 1 (LW 1 ) |
| Religion | : | |
| Age | : | 46 |

**1** வது எதிரி ஆஜர் இல்லை. **2** வது எதிரி காவலில் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். **1** வது எதிரி தரப்பில் **355** பா.நா.சு.சா மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 19th day of February 2026

**முதல் விசாரணை**

நான் வடக்குபாளையத்தில் குடியிருந்து தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். 23.02.2018 ஆம் தேதியன்று வடக்குபாளையத்தில் உள்ள ஜெபமாலை மாதா ஆலயத்திற்கு மாலை சுமார் 6.30 மணிக்கு வழிபாட்டிற்காக நானும், எனது மனைவி மற்றும் 2 மகன்களுடன் என் வீட்டிலிருந்து சென்றோம். வீட்டை பூட்டிவிட்டு மேற்படி கோவிலுக்கு சென்றோம். திரும்ப வழிபாடு முடித்து 8.30 மணிக்கு வீட்டிற்கு வந்தோம். அப்போது வீட்டின் முன்பு வீட்டின் முன்பக்க கதவு பூட்டு உடைக்கப்பட்டு கதவு திறக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் எனக்கு அதிர்ச்சியாகி வீட்டிற்குள் சென்று பார்த்த போது நடு ஹாலில் வைத்திருந்த ஷார்ப் 21 இன்ச் டி.வி., அதன் பக்கத்தில் இருந்த சோனி டி.வி.டி பிளேயர், அதன் அருகே இருந்த பழைய நோக்கியா செல்போன், பக்கத்து ரூமில் இருந்த லாப்டாப்

மற்றும் அயன்பாக்ஸ் ஆகியவை காணவில்லை. தனியார் பள்ளியில் நான் பணிபுரிந்ததில் என்னால் உடனடியாக போலீசில் புகார் அளிக்க முடியவில்லை. அதன்பிறகு 13.03.2018 அன்று சோழத்தரம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொடுத்த புகாரை போலீசார் என்னை விசாரித்தார்கள். மறுநாள் திருடு போன பொருட்களை போலீசார் கண்டுபிடித்துவிட்டனர். செல்வமணி மற்றும் சேகர் இதில் ஈடுபட்டதாக தெரிந்து கொண்டேன். மேற்படி பொருட்களை நான் நீதிமன்றத்தில் மனுசெய்து பொருட்களை இடைக்கால பொறுப்பில் பெற்றுக் கொண்டேன். அந்த பொருட்கள் என்வசம் உள்ளது. என்னுடைய பொருட்களை புகைப்படத்தில் என்னால் அடையாளம் காட்ட இயலும். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள பொருட்கள் தான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொண்டேன். அதற்கான புகைப்படங்கள் (5 எண்ணிக்கை) அ.சா.ஆ.2 ஆகும்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் பெயர் ராபர்ட் வின்செண்ட் எனக்கு வடக்குபாளையம் சொந்த ஊர் ஆகும். அங்கு எத்தனை ஆண்டுகளாக வசிக்கிறேன் என்றால் 40 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். எனது வீடு கான்கிரிட் வீடு ஆகும். கதவு எதனால் செய்யப்பட்டது என்றால் மரத்தால் செய்யப்பட்டது. அது இரும்பு பூட்டால் பூட்டக்கூடிய கதவு ஆகும். எனது வீட்டின் அருகே வேறு வீடுகள் உள்ளதா என்றால் வீடுகள் உள்ளது. எதிரில் வீடு இல்லை வயல் தான் உள்ளது. கோயிலும் அதே ஊரில் தான் உள்ளது சுமார் ஒன்றரை கி.மீ தூரத்தில் உள்ளது. ஏதாவது சத்தம் இருந்தால் கேட்கக்கூடிய அளவிற்கு தூரத்தில் பக்கத்தில் வீடு உள்ளது என்றால் சரியல்ல. அங்கு பிரதான சாலையில் ஆள்நடமாட்டம் இருக்குமா என்றால் இருக்கும். நான் 6.30 மணிக்கு கோயிலுக்கு புறப்பட்டேன் என்றால் சரிதான். 8.30 மணிக்கு மீண்டும் வீட்டிற்கு வந்தேன். அப்போது தான் வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால் உடைத்த நபர் வீட்டிற்கு திருட வந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சத்தம்போட்டு எவ்வளவு நேரத்தில் அக்கம்பக்கத்தினர் வந்தனர் என்றால் சுமார் 5 நிமிடத்தில் வந்தனர்.

நான் சத்தம் கேட்கும் தூரத்தில் வீடுகள் இல்லை என்று தெரிவித்துள்ள நிலையில் சத்தம் போட்டு 5 நிமிடத்தில் வந்து பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. எத்தனை நபர்கள் வந்தனர் எத்தனை நபர்கள் எடுத்து சென்றனர் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தன்றே நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். 10 நாட்கள் கழித்துதான் நான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். 13.03.2018 அன்று புகார் அளித்தேன். தாமதத்திற்கு காவல்நிலையத்தில் காரணம் கேட்டனரா என்றால் கேட்டனர் காரணம் தெரிவித்தேன். பொருட்கள் கிடைத்துவிட்டதாக எப்போது எனது வீட்டில் தகவல் சொன்னார்கள் என்றால் நினைவு இல்லை. சொன்னது மட்டும் தான் எனக்கு தெரியும். நான் திருடிய நபரை பார்த்ததில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தார் சொன்னதன் அடிப்படையில் தான் தற்போது எதிரியின் பெயரை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் காவல்துறையினர் தெரிவிக்கவில்லை என்றால் எதிரியின் பெயர் தெரியாது

என்றால் சரிதான். காவல்துறையினர் சொல்லியதன் அடிப்படையில் தான் நீதிமன்றத்தில் இருந்து பொருட்களை பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். காணாமல் போன பொருட்களை எதிரிகள் திருடவில்லை என்றாலும் காவல்துறையினர் சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை

Sinature of witness